# நேருக் கு நேர்



## நேருக்கு நேராக இருப்பது உங்களது பிள்ளைக்கு இவற்றில் உதவி செய்கிறது ...

- நீங்கள் கவனஞ் செலுத்துவதாகவும் அவன்/அவள் "கூற" இருப்பதைப் பற்றி ஆர்வங் கொள்வதாகவும் அறிந்து கொள்ளல்
- தொடர்பாடலின் ஒரு முக்கிய பகுதியான கண்ணுக்குக் கண் தொடர்பை ஏற்படுத்தி அதைப் பேணுதல்
- நீங்கள் கவனஞ் செலுத்தும் அதே விடயத்தில் கவனஞ் செலுத்தக் கற்றுக் கொள்ளல்
- நீங்கள் வெவ்வேறு ஓசைகளையும் சொற்களையும் சொல்லும் விதத்தைப் பார்த்தல்

## நேருக்கு நேராக இருப்பது உங்களுக்கு இவற்றில் உதவி செய்கிறது ...

- உங்களது பிள்ளை பார்ப்பது யாதென அவதானித்தல், அது அவர்கள் ஆர்வமாயுள்ளது யாதென்பதைப் பற்றிய ஒரு குறிப்பாகும்
- உங்களது பிள்ளையின் வெளிப்படுத்தல்களைக் கவனித்தல் - அதன் மூலம் நீங்கள் எப்போது நிறுத்த வேண்டும், எப்போது செயற்பாடுகளை மாற்ற வேண்டும், எப்போது விளையாடிக் கொண்டிருக்க வேண்டும் என்பவற்றைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்

## நான் எவ்வாறு நேருக்கு நேராக இருப்பது?

- உங்களது பிள்ளையின் உடல் மட்டத்துக்குக் கீழிறங்குங்கள் (உதாரணமாக சிறு கதிரைகளில் இருத்தல், தரையில் சாய்ந்து கொள்ளல், உங்களது பிள்ளையைத் தூக்கிக் கொள்ளல் போன்றவை)
- நேருக்கு நேர் தொடர்பைப் பேணுவதற்காக உங்களது பிள்ளை நகரும் போது நீங்களும் நகருங்கள்
- உங்களது பிள்ளை உங்களது கண்களையும் வாயையும் பார்ப்பதற்காக தூண்டும் பொருட்களை (அஃதாவது விருப்புக்குரிய விளையாட்டுப் பொருட்கள்/உணவு போன்றவற்றை) உங்களது கன்னத்துக்கு அருகில் பிடித்து வைத்திருங்கள்

PH1605SS830

# உங்களது பிள்ளையின் வழி நடத்தலைப்பி ன்பற்றுங்கள்



## உங்களது பிள்ளையின் வழி நடத்தலை ஏன் பின்பற்ற வேண்டும்?

- நீங்கள் உங்களது பிள்ளை ஆர்வமாயிருப்பது யாதென்று கூறும் போது, அது அவனுக்கு/அவளுக்கு மொழியைக் கற்றுக் கொள்வதில் இன்னும் இலகுவான வேளையாக இருக்கும்
- உங்களது பிள்ளையின் வழி நடத்தலைப் பின்பற்றுவதன் மூலம், உங்களது பிள்ளை செய்யும் விடயத்தில் நீங்கள் ஆர்வமாயிருப்பதாக அவனுக்கு/அவளுக்குக் காட்டப்படுகிறது

## உங்களது பிள்ளையின் வழி நடத்தலைப் பின்பற்றும் முறை ...

- உங்களது பிள்ளை ஆர்வமாயிருக்கும் விடயத்தைப் பார்க்க அவதானமாயிருங்கள்
- உங்களது பிள்ளைக்கு விளையாட்டுப் பொருளை அல்லது செயற்பாட்டைத் தெரிவு செய்யும் வாய்ப்பை வழங்கக் காத்திருங்கள்
- நீங்களும் உங்களது பிள்ளையும் செய்து கொண்டிருப்பதைப் பற்றிச் சேர்ந்து உரையாடுங்கள்

## உங்களது பிள்ளையின் வழி நடத்தலைப் பின்பற்றக் கூடாத வேளை ...

- உங்களது பிள்ளை செய்வதை நீங்கள் விரும்பாத ஒன்றை அவன்/அவள் செய்தல் (உதாரணமாக விளையாட்டுப் பொருளை வீசியெறிதல், கடித்தல்)
- உங்களது பிள்ளை கவனித்தல் குறைவாயிருத்தல்

# சேர்ந்து கொள்வதும் விளையாடுவதும்

நீங்கள் சேர்ந்து கொண்டு ஒன்றாக விளையாடுவதன் மூலம் மேலும் அதிகமாக மொழியைக் கற்கவும் உங்களுடன் பேசப் பழகவும் நீங்கள் உங்களது பிள்ளைக்குப் பல சந்தர்ப்பங்களை உருவாக்குகிறீர்கள்.

| இவ்வாறு செய்வதற்குப் பதிலாக ... | | இவ்வாறு செய்ய முயலுங்கள் ... |
|---|---|---|
| நீங்கள் தெரிவு செய்யும் ஒரு விளையாட்டுப் பொருளைக் கொண்டு விளையாடுமாறு உங்களது பிள்ளையை வற்புறுத்தல் ... | ⇒ | உங்களது பிள்ளை ஆர்வங்கொள்ளத் தக்கதாகக் கண்டு கொள்ளும் விளையாட்டுப் பொருள் யாதென்பதைப் பார்க்கக் காத்திருந்து, பின்னர் சேர்ந்து விளையாடுங்கள். |
| உங்களது பிள்ளை விளையாடுவதைப் பக்கவாட்டிலிருந்து அவதானித்தல் ... | ⇒ | (பொருத்தமாயின்) நீங்களும் ஒரு விளையாட்டுப் பொருளை எடுத்துக் கொண்டு உங்களது பிள்ளை அவ்விளையாட்டுப் பொருளில் செய்வதைப் பிரதியிடுங்கள். |
| விளையாட்டுப் பொருட்களின் மூலம் என்ன செய்ய வேண்டுமென்று உங்களது பிள்ளைக்குக் கூறுதல் ... | ⇒ | நீங்களும் ஒரு விளையாட்டுப் பொருளை எடுத்துக் கொண்டு அவனுக்கு/அவளுக்கு விளையாடும் முறையைக் காட்டுங்கள்.<br>விளையாடுவதாக நடிப்பது மொழி விருத்திக்கு முக்கியமானது என்பதால் உங்களது பிள்ளைக்காக (உணவூட்டுதல், தலை வாருதல், உறங்குதல், ஆடையணிதல், கழுவுதல் என்பன போன்று) எளிய விளையாட்டுச் செயற்பாடுகளைக் கொண்டு நடியுங்கள். |
| உங்களது பிள்ளையுடன் விளையாடும் போது அதற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்டதாகவும் தானாக உந்தப்பட்டது போன்றும் உணர்தல் ... | ⇒ | நீங்கள் எவ்வாறு தோன்றுகிறீர்களென்பதை மறந்து விட்டு, விளையாட்டுப் பிள்ளையாக இருங்கள் - வீட்டில் இருப்பதிலேயே சிறந்த விளையாட்டுப் பொருள் நீங்களே! உணர்ச்சித் தூண்டலான குரல், ("ஆகா", "ஈய்", "டும்" என்பன போன்று) வேடிக்கையான சொற்கள், ஏராளமான பாவனை செய்தல்கள்/முக பாவனைகள் என்பவற்றின் மூலம் நீங்கள் உங்களது பிள்ளையின் கவனத்தைப் பெறுவீர்கள். |



# எளிய மொழி நடையைப் பயன்படுத்துங்கள்

உங்களது பிள்ளையுடன் உரையாடும் போது சிறிய வசனங்களைப் பயன்படுத்துங்கள் (அஃதாவது பெரும்பாலும் ஒன்று முதல் மூன்று சொற்கள் வரை).

எப்போதும் உங்களது பிள்ளையின் அப்போதைய தொடர்பாடல் மட்டத்தை விட ஒரு படி மேலே நில்லுங்கள். உதாரணமாக:

நீங்கள் உங்களது பிள்ளைக்கு பழச்சாறு கொடுக்கிறீர்கள். “உனக்கு ஒரு குவளை பழச்சாறு வேண்டுமா?” என்று கேட்பதற்குப் பதிலாக, பின்வருமாறு முயலுங்கள்:

| உங்களது பிள்ளை ... | நீங்கள் ... | உதாரணம் |
|---|---|---|
| சொற்களைப் பயன்படுத்தாவிட்டால் | தனிச் சொற்களைப் பயன்படுத்துங்கள் | “பழச்சாறு?” |
| தனிச் சொற்களைப் பயன்படுத்துகிறதாயின் | இரு சொற் சேர்க்கைகளைப் பயன்படுத்துங்கள் | “பழச்சாறு வேண்டுமா?” |
| இரு சொற் சேர்க்கைகளைப் பயன்படுத்துகிறதாயின் | முச்சொற் சேர்க்கைகளைப் பயன்படுத்துங்கள் | “ஓரளவு பழச்சாறு வேண்டுமா?” |




- நீங்கள் சொல்வதை உங்களது பிள்ளை விளங்கிக் கொள்ள உதவுவதற்காக இந்த உபாயம் பயன்படுத்தப்படலாம்
- சிறிய சொற்றொடர்களைப் பயன்படுத்துவது, உங்களது பிள்ளைக்கு வாக்கியத்திலிருந்து முக்கியமான சொற்களைத் தெரிவு செய்து கொள்ள உதவுகிறது
- உங்களது பிள்ளை ஏற்கனவே மொழியை நன்றாக விளங்கிக் கொள்கிறதாயின், சிறிய வாக்கியங்களைப் பயன்படுத்துவது நீங்கள் சொல்வதைப் பிரதியிடுவதை உங்களது பிள்ளைக்கு இன்னும் இலகுவாக்கும்

# அடையாளமிடுதல்

**அடையாளமிடுதல் (அல்லது பெயரிடுதல்) என்பது நீங்கள் உங்களது பிள்ளைக்கு புதிய சொற்களைக் கற்றுக் கொள்ள உதவும் ஒரு வழியாகும்.**

அடையாளமிடுவது பயனுள்ளதாகும். ஏனென்றால் அது:

- நீங்கள் உங்களது பிள்ளை ஆர்வத்துடன் கவனஞ் செலுத்தும் விடயத்துக்குத் துலங்கலைக் காட்டுவதாக அவனுக்கு/அவளுக்குக் காட்டுகிறது
- ஒரு பாவனை செய்தலுக்குப் பதிலாக நீங்கள் ஒரு சொல்லைப் பயன்படுத்தலாம் என்பதை உங்களது பிள்ளைக்குக் கற்பிக்கிறது

## பேசு பொருட்களுக்கான சில யோசனைகள் இதோ:

ஆட்களினதும் உங்களது பிள்ளை ஆர்வமாயிருக்கும் பொருட்களினதும் பெயர்களை அவனுக்கு/அவளுக்குக் கூறுங்கள்:

| | |
|---|---|
| பந்து | விசுக்கோத்து |
| பழச்சாறு | அப்பா |
| நாய் | ஊஞ்சல் |

உங்களது பிள்ளை செய்வதைப் பற்றிப் பேசுங்கள்:

| | |
|---|---|
| தள்ளு | திற |
| நட | கொடு |
| விசிறு | சாப்பிடு |

பொருட்களும் ஆட்களும் இருக்குமிடத்தைப் பற்றிப் பேசுங்கள்:

| | |
|---|---|
| உள்ளே | மேலே |
| வெளியே | மீது |

உங்களது பிள்ளையின் அன்றாட நிலைமைகளுக்குப் பயனுள்ளவையான (தொழிற்பாட்டு) சொற்களைப் பயன்படுத்துங்கள்:

| இவற்றைப் பயன்படுத்துவதில் கவனஞ் செலுத்துங்கள்: | இவற்றைப் பயன்படுத்துவதைத் தவிருங்கள்: |
|---|---|
| உதவு | முக்கோணம் |
| இன்னும் | தயவு செய்து |
| என்னுடையது | வெறித்துப் போய் |
| சாப்பிடு | நல்ல பிள்ளை |



# மீண்டும் மீண்டும் சொல்லுங்கள்

**பல வித்தியாசமான நிலைமைகளில் முக்கியமான சொற்களைப் பல தடவை மீண்டும் மீண்டும் சொல்லுங்கள்:**

உதாரணமாக,

ஒரு செயற்பாட்டின் போது வேறு சொற்களுடன் சேர்ப்பதன் மூலம் உங்களால் "குமிழிகள்" எனும் சொல்லை எத்தனை தடவை கூற முடியுமென்று பாருங்கள்:

"குமிழிகள்"

"திறக்கும் குமிழிகள்"

"ஊதும் குமிழிகள்"

"பிதுங்கும் குமிழிகள்"

"மூடும் குமிழிகள்"

"குமிழிகள்"

"இன்னும் குமிழிகள்"

* குமிவிக் குச்சிகள் பிள்ளைகளுக்கு ஒட்டிக்கொள்ளும் இடர்ப்பாட்டைக் கொண்டிருக்கலாம்; எப்போதும் நீங்கள் குச்சியைக் கையில் பிடித்திருப்பதை உறுதி கொள்ளுங்கள்

- உங்களது பிள்ளைக்கு செயற்படுவதற்கு அல்லது பதிலளிப்பதற்குரிய வாய்ப்பை வழங்கக் காத்திருங்கள்
- சில பிள்ளைகளுக்கு அவர்கள் ஒரு சொல்லை விளங்கி அதைச் சொல்ல முயல முன்னர் பல தடவை அதைக் கேட்கும் தேவையுள்ளது



# காத்திருத்தல்

- உங்களது பிள்ளை கருத்துரைக்கும் வரை, செயற்படும் வரை, அல்லது ஒரு பாவனை செய்வதன் அல்லது ஒரு சொல்லின் மூலம் இன்னும் விளக்கம் கேட்கும் வரை காத்திருங்கள்
- நீங்கள் ஐந்து பத்து செக்கன்கள் காத்திருந்த பின்னரும் உங்களது பிள்ளை எதையும் கூறாவிட்டால், அவன்/அவள் கூறியிருக்க வேண்டிய சொல்லைச் சொல்லிக் காட்டுங்கள். உதாரணமாக:

  பெற்றார்: “நாங்கள் துண்டைப் போடப் போகிற இடம் ____.”

  பிள்ளை “மேலே” என்று விடையளிக்கும் வரை பெற்றார் ஐந்து பத்து செக்கன்கள் காத்திருப்பார்.

  பிள்ளை: பதிலளிக்கவில்லை.

  பெற்றார்: “**மேலே**. துண்டை **மேலே** போடுங்கள்.”

  *பெற்றார் பிள்ளைக்கு துண்டுக் கோபுரத்தின் மீது போடுவதற்கு துண்டைக் கொடுக்கிறார்.*

- வெவ்வேறு நிலைமைகளில் உங்களது பிள்ளைக்கு உதவக்கூடியவாறு இருங்கள், ஆயினும் உங்களது பிள்ளை கண் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம், பொருளை உங்களிடம் கொண்டு வருவதன் மூலம், குரல் கொடுப்பதன் மூலம், அல்லது “உதவுங்கள்” என்று கூறுவதன் மூலம் “உதவி” கேட்கும் வரை காத்திருங்கள்



# தொடர்பாடல் செய்து காத்திருக்க ஒரு

## காரணத்தைக் கொடுங்கள்

**இந்த உபாயங்கள் “ஆம்” அல்லது “இல்லை” என்று மட்டும் பதில் கூற இயலுமாயிருப்பதை அகற்றுவதுடன், உங்களது பிள்ளை பொருளுக்குக் குறிப்பான பெயரைப் பயன்படுத்துவதைத் தூண்டுகின்றன. இந்த உபாயங்கள் உங்களது பிள்ளைக்கு கருத்துரைக்கும் அல்லது செயற்படும் வாய்ப்பையும் வழங்குகின்றன.**

அவாவுற்றுள்ள பொருட்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுங்கள் ...

- இந்த உபாயம் தேனீர் வேளையின் போது நன்கு வேலை செய்கிறது: உங்களது பிள்ளை தேனீர் வேளையில் பல் தடவை இன்னும் கேட்கக் கூடியதாக அவனது/அவளது கோப்பையில் சிறிதளவு பழச்சாற்றை அல்லது பாலை மட்டுமே ஊற்றுங்கள்
- எல்லாத் துண்டுகளையும் “வைத்திருப்பவராக” இருங்கள்
- (புதிர், கட்டங்கள் போன்ற) பல துண்டுகளைக் கொண்ட விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு விளையாடும் போது எல்லாத் துண்டுகளையும் ஒரு பையில் அல்லது கொள்கலனில் வைத்திருப்பதன் மூலம் உங்களது பிள்ளை ஒவ்வொரு கட்டத்தின் போதும் ஒரு துண்டைக் கேட்கத் தூண்டுங்கள்

### ஒரு தெரிவை வழங்குங்கள் ...

- “உங்களுக்கு கார் வேண்டுமா கட்டம் வேண்டுமா?” என்று கேட்டவாறு ஒவ்வொரு தெரிவையும் காட்டிப் பெயர் கூறுங்கள்
- உங்களது பிள்ளை அவனுக்கு/அவளுக்கு என்ன வேண்டுமென்பதைக் “கூறக்” காத்திருங்கள் (உதாரணமாக பார்ப்பதன் மூலம், அடைவதன் மூலம், சுட்டுவதன் மூலம், குரல் கொடுப்பதன் மூலம் அல்லது சொற்களைப் பயன்படுத்தவதன் மூலம்)
- கேட்ட பொருளை மாத்திரம் கொடுங்கள்
- நீங்கள் உங்களது பிள்ளைக்கு பொருளைக் கொடுக்கும் போது அதன் பெயரைக் கூறுங்கள் (உதாரணமாக, “கட்டம், உனக்கு கட்டம் வேண்டும்.”)

சிறுபிள்ளைத்தனமான அல்லது வழமைக்கு மாறான நிலைமையை உருவாக்குங்கள் ...

- உங்களது பிள்ளை எதிர்பாராத ஒன்றைச் செய்து விட்டு, அதன் செயற்பாட்டுக்காகக் காத்திருங்கள்

  சிறுபிள்ளைத்தனமான நிலைமைகளுக்கான உதாரணங்கள்:

  - உங்களது பிள்ளையின் பஜாமாக் காற்சட்டைகளை அவனது/அவளது தலையில் போடுங்கள்
  - உங்களது பிள்ளையின் இரு காலுறைகளையும் ஒரே காலில் போடுங்கள்
  - நீரில்லாத ஒரு குளியல் தொட்டியில் உங்களது பிள்ளையை மகிழ்ச்சிகரமாகக் குளிப்பாட்டத் தொடங்குங்கள்
  - உங்களது பிள்ளையின் பழச்சாற்றை ஊற்றத் தொடங்குங்கள், ஆனால் கோப்பையை “மறந்து விடுங்கள்”



# கருத்துரையுங்கள்...

# கேள்வி கேட்பதைத் தவிருங்கள்

**நாங்கள் அடிக்கடி அளவுக்கதிகமாகக் கேள்வி கேட்கிறோம், இது உரையாடலைத் தொடரச் செய்வதற்குப் பதிலாக நிறுத்தி விடுகிறது. இவ்வாறு செய்ய முயலுங்கள்:**

- குறைந்த எண்ணிக்கையிலான கேள்விகளையே கேளுங்கள்
- ஒரு கேள்வியை ஒரு **கருத்துரையாக** மாற்றுங்கள்
  - ஒரு கேள்வியைக் கேட்பதற்குப் பதிலாக, நீங்கள் அல்லது உங்களது பிள்ளை செய்து கொண்டிருப்பதைப் பற்றிப் பேசுங்கள் ...
  - “இந்தக் கார் மேலே போகிறதா” என்று கேட்பதற்குப் பதிலாக “கார் மேலே போகிறது” என்று நீங்கள் கூறலாம்.
- **உங்களது** பிள்ளைக்கு சொல் தெரியுமா என்று சோதிப்பதற்குப் பதிலாக புதிய சொற்களைக் குறிப்பிடுங்கள் ...
  - “அது என்ன?” அல்லது “அப்பிள் என்று சொல்?” என்று கேட்பதற்குப் பதிலாக “அப்பிளைப் பார், சுவையான அப்பிள்.” என்று நீங்கள் கூறலாம்.
- நீங்கள் உண்மையிலேயே தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயிருந்தால் கேள்வி கேளுங்கள் (உதாரணமாக, “அம்மாவின் சாவிகள் எங்கே?”)
- அளவுக்கதிகமாகக் கேள்விகளைப் பயன்படுத்துவது உங்களது பிள்ளைக்கு சொற்களைப் பிரதியிடும் வாய்ப்புக்களைக் குறைந்தளவே வழங்குகிறது

**இதைச் செய்வதைத் தவிருங்கள்:**




**பகரமாக இதைச் செய்யுங்கள்:**



# முறை மாற்றுதல்

முறை மாற்றுதல் உங்களது பிள்ளை கற்றுக் கொள்வதற்கான ஒரு முக்கிய திறனாகும். முதலில், பிள்ளைகள் விளையாட்டிலேயே முறை மாற்றிப் பெறக் கற்கின்றனர். பின்னர், ஊடாட்டங்களின் போது "பேசுவதன்" மூலம் முறை மாற்றிப் பெறும் முறையை பிள்ளைகள் விளங்கிக் கொள்கின்றனர். முறை மாற்றிப் பெறுவது பிள்ளையின் கவனஞ் செலுத்தும் பரப்பைக் கூட்டுவதுடன், கண் தொடர்பை ஊக்குவிக்கிறது.

இவ்வாறு முறை மாற்றுங்கள்:

- உங்களது பிள்ளை முதலில் பெற வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கும் வரையறுத்த எண்ணிக்கையிலான முறைகளை அமைத்தல் (உதாரணமாக, அவன்/அவள் செல்ல முன்னர் கோபுரத்தில் இரு கட்டங்களை வைத்து விடுங்கள்)
- உங்களது பிள்ளையின் கண்ணோட்டத்திலிருந்து முறைகளைக் குறிப்பிடுதல், (உதாரணமாக, "எனது முறை", "அம்மாவின் முறை.")
- "இன்னும் ஒரு கட்டம்", "எல்லாக் கட்டங்களையும் வைத்து விட்டோம்" என்பன போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துதல்
- உங்களது பிள்ளை செயற்பாட்டுக்குப் பதிலளிக்கும் முறையைப் பொறுத்து, அவன்/அவள் பெற வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கும் தடவைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- உங்களது பிள்ளையின் ஆர்வத்தைத் தக்க வைப்பதற்காக உங்களது முறையை விரைவாகப் பெற்றுக் கொள்ளல்

## முறை மாற்றுவதற்கான செயற்பாடுகளின் உதாரணங்கள்:

| செயற்பாடு | அதனை இணைந்த செயற்பாடாக்குவது | குறிப்பிடுவதற்காக சொற்களைப் பயன்படுத்துதல் |
|---|---|---|
| பந்து | போட்டுப் பிடித்து விளையாடுங்கள், முன்னும் பின்னும் உருட்டுங்கள், பந்தை எறிந்து ஒரு பெட்டியில் போடுங்கள் | பந்து, எறி, உள்ளே, துள்ளல், பிடி |
| கட்டங்கள் | ஒன்றிணைந்து ஒரு கோபுரத்தைக் கட்டுங்கள், கட்டங்களை ஒவ்வொன்றாக எடுங்கள் | கட்டம், மேலே, வெளியே, கீழே விழுதல் |
| புதிர் | ஒன்றிணைந்து ஒவ்வொன்றாக ஒரு புதிரைப் போடுங்கள் | புதிர்த் துண்டுகளின் மீதிருக்கும் விலங்கின்/பொருளின் பெயர்கள், இன்னும், உள்ளே போடு, வெளியே எடு |



# உங்களது பிள்ளை என்ன பொருள்கொள்வதாக நீங்கள் நினைக்கிறீர்களென்று கூறுங்கள்

- உங்களது பிள்ளை சொற்களைப் பயன்படுத்தாவிடின், அல்லது சொல்லப்பட்டதை நீங்கள் விளங்கிக் கொள்ளாவிடின், உங்களது பிள்ளையால் முடியுமாக இருந்தால் அவன்/அவள் கூறக்கூடியவாறு அதைக் கூறுங்கள்
- பிழையின் போது கவனிக்குமாறு கூறாமல், சொற்கள் ஒலிக்க வேண்டிய முறையைப் பற்றி உங்களது பிள்ளைக்கு ஒரு நல்ல, தெளிவான முன்னுதாரணத்தைக் கொடுங்கள். உதாரணமாக:

  பிள்ளை: "கு"

  பெற்றார்: "குருவி, ஆம், அங்கே குருவி நிற்கிறது!"

- உங்களது பிள்ளை பயன்படுத்தும் ஓசைகளுக்கான அல்லது பாவனைகளுக்கான சொற்களை அவனுக்கு/ அவளுக்கு வழங்குங்கள். உதாரணமாக:

  பிள்ளை: பழச்சாற்றை அடைந்து, "ஆ ஆ" என்கிறார்.

  பெற்றார்: பிள்ளைக்கு பழச்சாறு தேவைப்படுவதாகப் பொருள் கொண்டு கூறுகிறார், "பழச்சாறு. அப்பா, பழச்சாறு." பெற்றார் பிள்ளைக்கு பழச்சாற்றை ஊற்றுகிறார்.

  பிள்ளை: உறங்கப் போகும் நேரத்தில் பெற்றார் ஒரு புத்தகத்தைக் கொடுக்கும் போது கத்தி அழத் தொடங்குகிறது.

  பெற்றார்: பிள்ளை புத்தகம் வாசிக்க விரும்பவில்லையெனப் பொருள் கொண்டு கூறுகிறார், "வேண்டாம், புத்தகம் வேண்டாம்!" பெற்றார் பிள்ளைக்கு மற்றொரு புத்தகத்தை வாசிக்கக் கொடுக்கிறார் அல்லது மற்றொரு இராக்காலச் செயற்பாட்டைக் கொடுக்கிறார்.



# ஒரு புத்தகத்தைப் *பகிர்ந்து* கொள்ளல்



### ஒரு புத்தகத்தைப் பகிர்ந்து கொள்ளும் போது:

- உங்களது பிள்ளைக்கு புத்தகத்தைத் தெரிவு செய்ய அனுமதியுங்கள்
- படங்களைப் பார்ப்பதற்காக உங்களது பிள்ளைக்கு வேண்டியளவு நேரத்தை அவனுக்கு/அவளுக்குக் கொடுங்கள்
- ஓசைகளின், செயல்களின், அல்லது சொற்களின் மூலம் சேர்ந்து கொள்ளுங்கள்

### ஒரு புத்தகத்தை வாசிக்கும் போதான சில யோசனைகள்:

- புத்தகம் உங்களது பிள்ளையை நோக்கி இருக்கின்றவாறு அவனுடன்/அவளுடன் நேருக்கு நேர் அமர்ந்து கொள்ளுங்கள்
- ஏராளமான படங்களைக் கொண்ட புத்தகங்களைப் பயன்படுத்துங்கள்
- படங்களைக் குறிப்பிடுங்கள் (உதாரணமாக, "எனக்கு ஒரு பந்து தெரிபடுகிறது." நிறுத்தி விட்டு உங்களது பிள்ளை தனது முறையைப் பெற்றுக் கொள்வதற்காகக் காத்திருங்கள்)
- கதையை எளிதாக வைத்திருங்கள், கதைக்கான சொற்களை உருவாக்குங்கள், அல்லது அவற்றை மாற்றுங்கள்
- ஒரு உணர்ச்சித் தூண்டலான குரலைப் பயன்படுத்துங்கள், ஓசைகளையும் கதையுடன் சேர்ந்து போகும் விசேட குரல்களையும் ஏற்படுத்துங்கள்
- உங்களது பிள்ளை நிரப்புகின்றவாறு பரிச்சயமான சொற்களை அல்லது கதையின் பகுதிகளை விட்டு விடுங்கள் (உதாரணமாக, "முன்னொரு காலத்தில் ஒரு கரடி இருந்தது. அது அன்பாயிருந்தது தனது _____ உடன்.")
- நிகழ்வுகளுக்கான காரணங்களைப் பற்றிப் பேசுங்கள் (ஏன்? எப்படி?)
- களிப்படையுங்கள், அந்த விசேடமான களிப்பை உங்களது பிள்ளையுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

# அன்றாடப் பழக்க வழக்கங்கள்

- அன்றாடப் பழக்க வழக்கங்களிலிருந்து பயன் பெறுங்கள், அத்துடன் மொழியைச் சேர்த்துக் கொள்ளுங்கள்

  இது பின்வருவனவற்றுக்கான ஒரு நல்ல வாய்ப்பாகும்:
  - முக்கியமான செயல்களையும் பொருட்களையும் குறிப்பிடுங்கள்
  - முக்கிய சொற்களை மீண்டும் மீண்டும் கூறுங்கள்
  - உங்களது பிள்ளைக்குத் தொடர்பாடலுக்கான ஒரு காரணத்தைக் கொடுங்கள்
  - ஒன்று சேர்ந்து முறை மாற்றுங்கள்
- அமைத்துக் கொள்ளுங்கள்: பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுங்கள் (உதாரணமாக, “உடுத்தல்”)

  ஒவ்வொரு படிமுறையையும் குறிப்பிடுங்கள், உதாரணமாக, “சட்டையைப் போடு”, “காற்சட்டையைப் போடு”, “காலுறைகளைப் போடு”
- காற்சட்டைகளை வைத்துக் கொண்டு, உங்களது பிள்ளை எதையாவது சொல்லும் வரை அல்லது செய்யும் வரை காத்திருங்கள்
- அடுத்ததாக எதைப் போடுவது எனத் தெரிவு செய்வதன் மூலம் முறையை மாற்றுங்கள்
- பழக்க வழக்கத்தின் இறுதியைக் குறிப்பிடுங்கள் (உதாரணமாக, “எல்லாம் செய்தாகி விட்டது”)
- அன்றாடப் பழக்க வழக்கங்களுக்கான வேறு உதாரணங்கள்:
  - குளிக்கும் நேரம்
  - உறங்கும் நேரம்
  - சாப்பிடும் நேரம்
  - விளையாடும் நேரம்



# போலியாக நடித்துக் காட்டுதல்

**போலியாக நடித்துக் காட்டுதல் உங்களது பிள்ளையை ஊக்குவித்து உங்களுடன் ஊடாடத் தூண்டும். போலியாக நடித்துக் காட்டுதல் உங்களது பிள்ளை செய்யும் விடயத்தில் நீங்கள் ஆர்வமாயுள்ளதாக அவனுக்கு/அவளுக்குக் காட்டுவதுடன், அவனை/அவளை உங்களது பின்னால் நடித்துக் காட்டவும் தூண்டுகிறது.**

உங்களது பிள்ளைக்குப் போலியாக நடித்துக் காட்டுவதற்கான சில யோசனைகளாவன:

- உங்களது பிள்ளையின் உடலசைவுகளையும் முக பாவனைகளையும் போலியாக நடித்துக் காட்டுவதன் மூலம் அவனது/அவளது வழி நடத்தலைப் பின்பற்றுங்கள்
- உங்களது பிள்ளை தனது விளையாட்டுப் பொருளைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பதை விட மற்றொரு விளையாட்டுப் பொருளின் மூலம் நடித்துக் காட்ட முயலுங்கள். உங்களது பிள்ளை சொல்வதைப் போன்று சொல்லிக் காட்டுவதுடன், பிழைகளைத் திருத்துங்கள். உதாரணமாக:

  பிள்ளை: "சீப்புக் கார்."

  பெற்றார்: "ஆம், சிவப்புக் கார்."

நடித்துக் காட்டுவதுடன் ஓரிரு சொற்களைக் கூட்டிக் கொள்ளுங்கள். உதாரணமாக:

பிள்ளை: "பிள்ளையை வைத்து விடுங்கள்."

பெற்றார்: "பிள்ளையை மேசையின் மீது வைத்து விடுங்கள்."

உங்களது பிள்ளை சொல்லும் விடயத்துக்கு புதிய கருத்துக்களைச் சேருங்கள். உதாரணமாக:

பிள்ளை: "நாய்!"

பெற்றார்: "நாய் வள் வள் என்கிறது!"

